இவைகளைக் கணக்கில் கொண்டு பார்த்தால் கள்ளக்குறிச்சியில் மக்கள் தொகை 21,817 தான் இருக்கிறது. ஆகவே இத்திட்டம் அந்தப் பேரூராட்சியில் இப்போது எடுத்துக் கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகரத்தில் இந்தத் திட்டம் செயல்படாத காரணத்தினால், ஆங்காங்கே தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு நோய் ஏற்படுகிற அவலநிலை ஏற்படுகிறது. ஆகவே எதிர்காலத்திலாவது இதற்கு சிறப்பு முன்னுரிமை கொடுத்து இந்தத் திட்டத்தை அங்கே செயலாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 293, திரு நா. சா. பழனிசாமி; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

293—

நிலவள வங்கிக் கடன், மின்கட்டணத்தை விவசாயிகளிடமிருந்து வசூலித்தல்.

*11198—திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலவரி வசூல் சட்டத்தைப் பயன்படுத்தி கூட்டுறவு நிலவள வங்கி கடன்களையும், மின் கட்டண பாக்கிகளையும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கும் நேரடி நடவடிக்கையை அரசு கைவிட்டு சிவில் நீதிமன்றங்கள் மூலம் வசூலிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

[1993 ஏப்ரல் 8

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவரி வசூல் சட்டம் என்பது—ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்—என்ற அந்த சட்டம் லார்டு வெல்லெஸ்லி இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்திலே கொண்டு வரப்பட்ட சட்டம். அன்றைக்கு ஆங்கில ஆட்சியின்போது அவர்களுக்கு வருமானமாக இருந்தது நிலவரி ஒன்றின் மூலம்தான். அந்த நிலவரியை வசூலிப்பதற்காக அன்றைய கலெக்டர்களுக்கு—இன்றைக்கு தமிழில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்று நாம் சொன்னாலும், இன்றைக்கும் ஆங்கிலத்தில் கலெக்டர்கள் என்று தான் சொல்லுகிறோம். வரிவசூல் செய்கிற அந்த கலெக்டர்களுக்கு ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து வசூலிக்கிற அதிகாரத்தை மட்டும் கொடுப்பதற்காக இருந்த அந்த நிலவரி வசூலிப்பதற்காகக் கொண்டுவந்த சட்டத்தை, 1974 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் வசூலுக்கும் பயன்படுத்தலாம் என்று கொண்டு வந்த பிறகு கூட்டுறவு நிலவள வங்கிக்காக அந்தச் சட்டத்தைக் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மிகத் தவறுதலாகப் பயன் படுத்தி ஏழை எளிய விவசாயிகளை மிகவும் கொடுமைப் படுத்துகிற சம்பவங்கள் எல்லாம் தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு வணிக வங்கியில் பெற்ற கடனுக்கு சிவில் நீதிமன்றங்கள் மூலமாக வழக்குத் தொடுக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. ஆனால் கூட்டுறவு வங்கிகள் நிலவள வங்கிகள் மூலம் பெறப்பட்ட கடனுக்குத்தான் நேரடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவது என்பதைப் பொறுத்தவரை, வணிக வங்கி, கூட்டுறவு நிலவள வங்கி என்பதில் வித்தியாசம் இருக்கிறது. மேலும் தொழில் துறைக்காகப் பெற்ற கடனை திரும்ப வசூலிக்கும்போது இந்தச் சட்டத்தைப், பயன்படுத்துவதில்லை. எனவே நிலவரிச் சட்டத்தை ஒன்று எல்லோருக்குமாகக் கொண்டுவர வேண்டும், அல்லது விவசாயிகளுக்கு மட்டும் இதைப் பயன்படுத்துவதை அரசு கைவிடவேண்டும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிலவள வங்கியைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டின் நிலைமை மிகச் சங்கடமாக இருக்கிறது. 181 கூட்டுறவு நிலவள வங்கிகளில் 60 சதவீதம் வசூலித்த வங்கிகளுக்குத்தான் (Un restricted lending eligibility) வருகிறது. அப்படிப் பட்ட வங்கிகள் 31 தான் இருக்கின்றன. 150 வங்கிகள்

1993 ஏப்ரல் 8]

அப்படிப்பட்ட வசூலைப் பெறமுடியவில்லை. 97 கோடி ரூபாய் வரவேண்டும். ஆனால் 18 கோடி ரூபாய்தான் வசூலாகியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் வசூல் செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்டே இல்லாமல் செய்துவிடலாம் என்று சொல்லி இருக்கின்றார்கள். அப்படிச் செய்ய முடியுமானால் செய்துவிடலாம். ஆனால், வசூல் செய்வதற்கு வேறு ஏதாவது மாற்று வழி இருந்தால் அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களேயானால் அதை அரசு பரிசீலிக்கும். அவர்கள் சொல்வது, மற்ற எல்லாவற்றிற்கும் இதைப்போல வசூல் செய்யலாமே என்று சொல்கிறார்கள். நல்ல யோசனை. நம்முடைய நிலவள வங்கிகளைப் பொறுத்த மட்டில் நிறைய மனுக்கள் வந்து இருக்கின்றன. ஏற்கனவே வாங்கியவர்கள் 10 ஆண்டுக் காலம், 12 ஆண்டுக் காலம் கடனைத் திருப்பி செலுத்தாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஓரளவிற்குத் திருப்பி செலுத்தினால், புதிய மனுக்களுக்கு கடன் கொடுக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, இப்போது அப்படிப்பட்ட எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடன் வசூல் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்றைக்கு கூட்டுறவு நிலவள வங்கியில்தான் விவசாயிகளில் 90 சதவீதத்தினர் கடன் பெற்று இருக்கிறார்கள். ஆனால், அவர்களின் கடன் பாக்கிக்காக நிலவரி வசூல் சட்டம் பயன்படுத்தப்பட்டு கடன் வசூலிக்கப்படுகிறது. அதேபோல, வணிக வங்கிகளில் தொழில்துறைக்கு கடன் கொடுக்கிற வங்கிகளிலே தொழில் அதிபர்கள் பெருமளவிலே கடன் பெற்று இருக்கிறார்கள். ஒரு விவசாயி 10 ஆயிரம் கடன் பாக்கி வைத்து இருந்தால் தொழிலதிபர்கள் 10லட்சம் கடன்பாக்கி இருக்கிறார்கள். அவர்களிடத்திலே பங்களா இருக்கிறது, கார் இருக்கிறது, டெலிவிசன் இருக்கிறது. அவர்கள் வைத்திருக்கும் கடன் பாக்கிக்காக அவர்களுடைய ஆடம்பர பொருட்களை ஜப்தி செய்யப்படுவதில்லை. ஆனால், ஒரு விவசாயி வீட்டில் மட்டும் அவன் கூட்டுறவு வங்கியிலே கடன் பெற்று இருக்கிறான் என்ற ஒரே காரணத்திற்காக, ஒரு 10 ஆயிரம், 15 ஆயிரம் கடன் பாக்கிக்குக்கூட இந்த ஜப்தி நடவடிக்கை செய்யப்படுகிறதே! இந்த இரட்டை அணுகுமுறையை விட்டு—ஒன்று இந்தச் சட்டத்தை எல்லோருக்கும் கொண்டு வர வேண்டும் அல்லது இந்தச் சட்டத்தைக் கைவிட்டுவிட வேண்டும். ஏனென்றால், கமர்ஷியல் வங்கிகள் விவசாயிகளுக்குக் கொடுத்த கடனைக்கூட நீதிமன்றங்கள் மூலமாகத் தான் வசூலிக்கிறார்கள். எனவே, அந்த முறையை ஏன் அரசு கொண்டு வரக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமர்ஷியல் வங்கிகளோடு நம்முடைய கூட்டுறவு வங்கிகளை ஒப்பிட முடியாது. கூட்டுறவு வங்கிகள் மிகச் சிறிய வங்கிகள். பெரிய கமர்ஷியல் வங்கிகள் கொடுத்த கடன் திருப்பி வரவில்லை என்று சொன்னால்கூட, அவை தள்ளுபடி செய்துவிட்டு தாக்குப் பிடிக்க முடியும். ஆனால், கூட்டுறவு வங்கிகள் அப்படிச் செய்தால் நசிந்து போகும். அதனால் விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, கமர்ஷியல் வங்கிகளோடு ஒப்பிட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளும் இந்த முறையைக் கடைப் பிடிக்கலாமே என்ற யோசனையை நிச்சயமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளிடத்திலே மட்டும் வசூல் செய்கிறார்கள். வசதியான பெரும் தொழில் அதிபர்களிடத்திலே வசூல் செய்யப்படுவது இல்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்கள் என்று நான் நினைக்கின்றேன். ஆனால், வசூல் செய்வதில் கடுமை இல்லாமல் ''ஹாரஸ்மென்ட்'' இல்லாமல் பார்த்துக்கொள்வோம் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 294. திரு. இரா. அப்பு நடேசன் இருக்கையில் இல்லை. திரு. கு. லாரன்ஸ், கேட்கிறார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

294—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவு பங்கீட்டு அட்டை வழங்கல்.

*11389—திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவு பங்கீட்டு அட்டை இல்லாதவர்களுக்கு உணவு பங்கீட்டு அட்டை வழங்கப்படாதிருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக உணவு பங்கீட்டு அட்டை வழங்க அரசு உத்தரவிடுமா ?